முடிவு செய்யப்பட்ட மானியக் கோரிக்கைகள் நாளை 24–3–2020 விவாதத்திற்கும், வாக்கெடுப்பிற்கும் எடுத்துக்கொள்ளப்பெறும். மேலும், 24–3–2020 அன்றே, அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும், ஏனைய அரசினர் அலுவல்கள் ஏதேனும் இருப்பின் அதுவும் எடுத்துக்கொள்ளப்பெறும்."

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை நிறைவேற்றிய தீர்மானத்தின்படி 24–3–2020 முதல் 31–3–2020 வரை எடுத்துக்கொள்வதாக ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழுவால் முடிவு செய்யப்பட்ட மானியக் கோரிக்கைகள் நாளை 24–3–2020 விவாதத்திற்கும், வாக்கெடுப்பிற்கும் எடுத்துக்கொள்ளப்பெறும் என்பதையும், மேலும், 24–3–2020 அன்றே, அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும், ஏனைய அரசினர் அலுவல்கள் ஏதேனும் இருப்பின் அதுவும் எடுத்துக்கொள்ளப்பெறும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–55

8. கவன ஈர்ப்பு

(அ) திருவாரூர், ஆழித்தேர் ஓடும் வீதிகளில் புதைவட மின் கம்பிகள் அமைப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கி. கலைவாணன், இருக்கையில் இல்லை.

(ஆ) கீழ்வேளூர் தொகுதியில் நிலக்கடலை சாகுபடி குறைந்துள்ளதால் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டியது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன், இருக்கையில் இல்லை.